FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 173 BNSS)
(பா.குபா.ச பிரிவு 173 இன் கீழ்)

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

8082837

1. District : மாவட்டம் Virudhunagar | PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption | Year: ஆண்டு 2026 | FIR No. முத.அ. எண் 11/2026 | Date: நாள் 24.10.2026

2. (i) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018 | Sections பிரிவுகள்: u/s 7, 8
   (ii) Act சட்டம்: BNSS | Sections பிரிவுகள்: 106
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 23.10.2026 | Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 15.15 hrs | Time to : நேரம் வரை 23.00 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.10.2026 | Time : நேரம் 17.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 24.10.2026 | Time : நேரம் 17.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — விருதுநகர் மாவட்டம், சிவகாசி மாநகராட்சி அலுவலகம், சுமார் 30 கி.மீ வடக்கு.
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — திரு.பூ.இராஜாமணி
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — திரு.பூவலிங்கம்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 05.05.1982
   (d) Nationality : நாட்டினம் Indian
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் மாவட்ட துணை ஆய்வு குழு அலுவலர்
   (g) Address : முகவரி தனி வட்டாட்சியர் (நில எடுப்பு) தேசியநெடுஞ்சாலைகள், விருதுநகர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திரு.அமர்நாத், உதவி பொறியாளர், 2) திருமதி.அழகேஸ்வரி, இளநிலை பொறியாளர், பொறியாளர் பிரிவு. 3) திரு.முருகன், தொழில்நுட்ப உதவியாளர், பொறியியல் பிரிவு. 4) திரு.செல்வமணி. Data Enty Operator, 5) திருமதி.செல்வி, தட்டச்சர், 6) திரு.ஆசீர்வாதம், மேற்பார்வையாளர், சுகாதார பிரிவு. 7) திரு.ராஜ், அலுவலக உதவியாளர், பொதுப்பிரிவு. 8) திரு.முத்துமாரியப்பன், வருவாய் உதவியாளர் வருவாய் பிரிவு மற்றும் தனிநபர்களான 9) திரு.பழனிக்குமார், 10) திரு.சுப்புராஜ், 11) திரு.கருப்பசாமி, 12) திரு.ஞானகிராமன், 13) திரு.செல்வம், 14) திரு.தமிழாசன், 15) திரு.முருகன் மற்றும் 16) திரு.ரவி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் — தாமதமில்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் Not arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது.

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..... .....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொளளப்பட்டு அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பதிகாரியின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. JASMINE MUMTAJ
Rank: நிலை Inspr. ..... No. எண் .....

விருதுநகர் மாவட்ட ஊ.த.க. பிரிவு குற்ற எண்.11/2026 பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

அனுப்புநர் திரு.பூ.இராஜாமணி, (44/2026), த/பெ.பூவலிங்கம், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், விருதுநகர் மாவட்டம். தனி வட்டாட்சியர் (நில எடுப்பு), தேசிய நெடுஞ்சாலைகள், சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகம், பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,விருதுநகர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். அய்யா, பொருள் : பொது ஊழியர் - உள்ளாட்சி துறை - விருதுநகர் மாவட்டம் - சிவகாசி மாநகராட்சி அலுவலகம், சிவகாசி, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திடீர் இணை ஆய்வு - லஞ்ச பணம் கைப்பற்றியது - நடவடிக்கை எடுக்க வேண்டுவது - தொடர்பாக. நான் தற்போது விருதுநகர் மாவட்டம், தேசிய நெடுஞ்சாலைகள் தனி வட்டாட்சியராக (நில எடுப்பு) 07.10.2026 அன்று முதல் பணிபுரிந்து வருகிறேன். விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்பேரில், கடந்த 16.10.2026ஆம் தேதி முதல் விருதுநகர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகவும் இருந்து வருகிறேன். நேற்று (23.10.2026) பிற்பகல் சுமார் 13.15 மணியளவில் விருதுநகர் மாவட்டம், தேசிய நெடுஞ்சாலைகள் தனி வட்டாட்சியர் (நில எடுப்பு) அலுவலகத்தில் பணியிலிருந்தபோது, விருதுநகர் மாவட்டம், சிவகாசி மாநகராட்சி அலுவலகத்தில் பணிபுரிந்துவரும் பொறியாளர் / பொறியியல் பிரிவு அலுவலர்கள் ஒப்பந்ததாரர்களிடமும், இதர பிரிவு அலுவலர்கள் அலுவலக வேலைகளுக்காக அவர்களை நாடிவரும் பொதுமக்களிடமும், கையூட்டு பணம் பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலின்பேரிலும், விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோளின்பேரிலும், நேற்று (23.10.2026) பிற்பகல் சுமார் 13.45 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்து விபரத்தை கேட்டு தெரிந்துகொண்டு, விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.ஜாஸ்மின் மும்தாஜ் மற்றும் அவர்களது குழுவினருடன் நேற்று (23.10.2026) பிற்பகல் சுமார் 14.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தைவிட்டு புறப்பட்டு, சிவகாசி, இரத்தினம் நகர், சிவகாசி - திருவில்லிபுத்தூர் மெயின்ரோட்டிற்கு தெற்கே அமைந்துள்ள சிவகாசி மாநகராட்சி அலுவலகத்திற்கு பிற்பகல் சுமார் 15.15 மணியளவில் சென்று, இரவு 23.00 மணி வரை திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் இணை ஆய்வு சோதனையின்போது, அலுவலகத்திலிருந்த அலுவலர்களையும், அவர்களது இருக்கைகளையும், அவர்கள் வைத்திருந்த கைப்பை மற்றும் மணிபர்ஸ் ஆகியவற்றை சோதனை செய்தபோது, சிவகாசி மாநகராட்சி சுகாதார பிரிவு அலுவலர்களான Data Enty Operatior திரு.செல்வமணி என்பவர் வைத்திருந்த பணம் ரூ.2,300/-, தட்டச்சர் திருமதி.செல்வி என்பவர் வைத்திருந்த பணம் ரூ.1,600/-, மேற்பார்வையாளர் திரு.ஆசீர்வாதம் என்பவர் வைத்திருந்த பணம் ரூ.2,000/-, பொது பிரிவு அலுவலக உதவியாளர் திரு.ராஜு என்பவர்

வைத்திருந்த பணம் ரூ.3,000/-, வருவாய் பிரிவு வருவாய் உதவியாளர் திரு.முத்துமாரியப்பன் என்பவர் வைத்திருந்த பணம் ரூ.7,500/- ஆகமொத்தம் ரூ.16,400/- பணமானது அவர்களால் முறையாக கணக்கு காட்ட முடியாத பணம் எனவும், அன்று (23.10.2026) அவர்களை சந்திக்க அலுவலக வேலைக்காக வந்த பொதுமக்களிடம் பெற்ற லஞ்சப்பணமாக இருக்கலாம் எனவும் கருதி கைப்பற்றப்பட்டது. மேலும் திடீர் சோதனை செய்து கொண்டிருந்தபோது, மாநகராட்சி அலுவலகத்திற்கு வந்த ஒப்பந்ததாரர்கள்/தனிநபர்களிடம் விபரம் சொல்லி, அவர்களையும், அவர்களது கைப்பை மற்றும் மணிபர்ஸ் ஆகியவற்றை சோதனை செய்தபோது, தனிநபர்களான திரு.பழனிக்குமார் என்பவர் வைத்திருந்த பணம் ரூ.16,500/- மாநகராட்சி பொறியியல் பிரிவு தொழில்நுட்ப உதவியாளர் திரு.முருகன் என்பவருக்கும், திரு.சுப்புராஜ் மற்றும் திரு.கருப்பசாமி ஆகியோர் வைத்திருந்த பணம் முறையே ரூ.41,000/- மற்றும் ரூ.2,000/- மாநகராட்சி பொறியாளர் பிரிவு இளநிலை பொறியாளர் திருமதி.அழகேஸ்வரி என்பவருக்கும், திரு.ஜானகிராமன் என்பவர் வைத்திருந்த பணம் ரூ.13,500/- மாநகராட்சி பொறியாளர் பிரிவு உதவி பொறியாளர் திரு.அமர்நாத் என்பவருக்கும், திரு.செல்வம் மற்றும் திரு.ரவி ஆகியோர் வைத்திருந்த பணம் முறையே ரூ.4,000/- மற்றும் ரூ.50,000/- மாநகராட்சி சுகாதார பிரிவு அலுவலர்களுக்கும், திரு.தமிழரசன் என்பவர் வைத்திருந்த பணம் ரூ.17,000/- பொறியியல் பிரிவு அலுவலர்களுக்கும், திரு.முருகன் என்பவர் வைத்திருந்த பணம் ரூ.8,000/- மாநகராட்சி நகரமைப்பு பிரிவு அலுவலர்களுக்கும் ஆக மொத்தம் ரூ.1,52,000/- பணமானது அவர்கள் செய்து கொடுத்த / செய்து கொடுக்கவுள்ள பணிக்காக கொடுக்க கெண்டுவந்த லஞ்சப்பணமாக இருக்கலாம் எனவும், அவர்களால் கணக்கில் காட்ட முடியாத பணம் எனவும் கருதி கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக 23.10.2026 பிற்பகல் 15.15 மணி முதல் இரவு 23.00 மணி வரை ஒரு செயல்முறை நடவடிக்கைகள் தயார் செய்யப்பட்டது.

மேற்படி மாநகராட்சி சுகாதார பிரிவு அலுவலர்களான Data Enty Operator திரு.செல்வமணி, தட்டச்சர் திருமதி.செல்வி, மேற்பார்வையாளர் திரு.ஆசீர்வாதம், பொது பிரிவு அலுவலக உதவியாளர் திரு.ராஜு, வருவாய் பிரிவு வருவாய் உதவியாளர் திரு.முத்துமாரியப்பன் ஆகியோர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட மொத்தம் ரூ.16,400/- பணமும் அவர்களால் முறையாக கணக்கு காட்ட முடியாத பணம் என்றும், அவர்களை சந்திக்க அலுவலக வேலைக்காக வந்த பொதுமக்களிடம் பெற்ற லஞ்சப்பணமாக இருக்கலாம் என்றும் தெரியவந்ததாலும், மேலும் ஒப்பந்ததாரர்கள் மற்றும் இதர தனிநபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட மொத்தம் ரூ.1,52,000/- பணமும் அவர்களால் முறையாக கணக்கு காட்ட முடியாத பணம் என்றும், சிவகாசி மாநகராட்சியின் பொறியாளர் பிரிவு உதவி பொறியாளர் திரு.அமர்நாத், இளநிலை பொறியாளர் திருமதி.அழகேஸ்வரி, பொறியியல் பிரிவு தொழில்நுட்ப உதவியாளர் திரு.முருகன், நகரமைப்பு பிரிவு அலுவலர்கள் மற்றும் சுகாதார பிரிவு அலுவலர்கள் ஆகியோர்களுக்கு, அவர்கள் செய்து கொடுத்த / செய்து கொடுக்கவுள்ள பணிக்காக கொடுக்க கெண்டுவந்த லஞ்சப்பணமாக

இருக்கலாம் என்றும் தெரியவந்ததாலும், சிவகாசி மாநகராட்சி பொறியாளர் பிரிவு அலுவலர்களான 1) திரு.அமர்நாத், உதவி பொறியாளர், 2) திருமதி.அழகேஸ்வரி, இளநிலை பொறியாளர், பொறியியல் பிரிவு அலுவலரான 3) திரு.முருகன், தொழில்நுட்ப உதவியாளர், சுகாதார பிரிவு அலுவலர்களான 4) திரு.செல்வமணி, Data Enty Operator, 5) திருமதி.செல்வி, தட்டச்சர், 6) திரு.ஆசீர்வாதம், மேற்பார்வையாளர், பொதுப்பிரிவு அலுவலரான 7) திரு.ராஜு, அலுவலக உதவியாளர், வருவாய் பிரிவு அலுவலரான 8) திரு.முத்துமாரியப்பன், வருவாய் உதவியாளர் மற்றும் தனிநபர்களான 9) திரு.பழனிக்குமார், 10) திரு.சுப்புராஜ், 11) திரு.கருப்பசாமி, 12) திரு.ஜானகிராமன், 13) திரு.செல்வம், 14) திரு.தமிழரசன், 15) திரு.முருகன் மற்றும் 16) திரு.ரவி ஆகியோர்மீது வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் திடீர் இணை ஆய்வு செயல்முறைகள் நாள் 23.10.2026, கைப்பற்றப்பட்ட பணம் மொத்தம் ரூ.1,68,400/-, 1)சிவகாசி மாநகராட்சி பணியாளர்களின் பணம் கையிருப்பு விபர பதிவேடு அசல், 2) சிவகாசி மாநகராட்சி பொது பிரிவிலுள்ள பொதுமக்கள் மற்றும் பணியாளர்களின் பணம் கையிருப்பு விபர பதிவேடு அசல் மற்றும் சிவகாசி மாநகராட்சி அலுவலர்களான திரு.செல்வமணி, திருமதி.செல்வி, திரு.ஆசீர்வாதம், திரு.ராஜு, திரு.முத்துமாரியப்பன் மற்றும் தனிநபர்களான திரு.பழனிக்குமார், திரு.சுப்புராஜ், திரு.ஜானகிராமன், திரு.கருப்பசாமி, திரு.செல்வம், திரு.தமிழரசன், திரு.முருகன் மற்றும் திரு.ரவி ஆகியோர்களின் வாக்குமூலம் நாள்.23.10.2026 ஆகியவற்றையும் சமர்ப்பிக்கிறேன். (sd) P.Rajamani (24.10.2026) (திரு.பூ.இராஜாமணி), மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், விருதுநகர் மாவட்டம். தனி வட்டாட்சியர் (நில எடுப்பு), தேசிய நெடுஞ்சாலைகள், சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகம், விருதுநகர் மாவட்டம். Sir, Received the complaint on 24.10.2026 at 17.00 hrs, As per the instruction of the Directorate of Vigilance and Anti-Corruption higher officials, I have registered a case in Virudhunagar V&AC Cr.No.11/2026 u/s 7,8 of P.C Act 1988 as amended in 2018 and 106 BNSS on 24.10.2026 at 18.00 hrs (Sd) ஷே.ஜாஸ்மின்மும்தாஜ், 24/x/2026, Inspr / V&AC/ VNR.

The original FIR along with original complaint, Joint Surprise Check Proceedings are submitted to the court of the Principal District and Session Judge cum Special Judge for P.C. Act cases, Virudhunagar at Srivilliputhur and copies submitted to the concerned officers.

24/x/26.

Inspr/V&AC/VNR.